உ
சிவமயம்
# அகில இலங்கை இந்து மாமன்றம்
(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)
# ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர்
**Chairman of the Board of Trustees**
வி. கயிலாசபிள்ளை
*V.Kailasapillai*
*Phone:2575566 (Res)*
*Fax : 2575472*
*hariomak@gmail.com*

தலைவர்
**President:**
கந்தையா நீலகண்டன்
*Kandiah Neelakandan*
*Phone: 2580807 (Res)*
*2371100 (Off) - Fax : 2371111*
*neela@mnlaw.lk*

பொதுச் செயலாளர்
**Hony. General Secretary:**
முத்தையா கதிர்காமநாதன்
*Muthiah Kathirgamanathan*
*Phone: 2582139 (Res)*
*Fax: 2593997*
*mknathan21@yahoo.com*

பொருளாளர்
**Hony. Treasurer:**
வே. கந்தசாமி
*V. Kandasamy*
*Phone: 2586620 (Res)*
*Mobile: 071-5349150*
*vkandasami@gmail.com*

13.01.2015

## தைப்பொங்கல் செய்தி

தை பிறந்தால் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையுடன் ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருளால் இந்த நாட்டில் நல்லாட்சி நிறுவ வழிபிறந்திருக்கிறது என இந்த நாட்டு இந்து மன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றம் நம்புகின்றது.

இந்நாட்டில் சகல மக்களும் எந்தவித பாகுபாடுமின்றி சம உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்வதை உறுதிப்படுத்தப் புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும், அதனை அனைத்து அரசியற் தலைவர்களும் ஆதரிக்கவேண்டும்.

பின்வரும் அவசர விடயங்களை அதிமேதகு ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறோம்:-

அ). வடக்கு, கிழக்கு மாகாணங்களில், தங்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று வாழ முடியாது, “நலன்புரி நிலையங்கள்” என்று நாமம் சூட்டப்பட்ட இடங்களில் பலமக்கள் **வாடுகின்றனர்**. அவர்கள் **சொந்த இடங்களில் திரும்பிச் சென்று வாழ** உடன் வழிவகுக்கப்பட வேண்டும். அது அவர்களின் **அடிப்படை உரிமையாகும்**. மீள் குடியமர்த்தும்வரை, எவ்வித தாமதமுமின்றி பசியால் வாடும் **அந்த மக்களுக்கு (இப்போது நிறுத்தப்பட்டிருக்கும்) உலர் உணவு வழங்க உடன் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.** இந்த நாட்டில் எந்தப் பிரஜையும் பசியால் வாட அனுமதிக்கக்கூடாது,

ஆ). மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வடமாகாணசபையும் எவ்வித தாமதமுமின்றி **இயங்குவதற்கு** உடனே ஆவன செய்யப்பட வேண்டும்,

இ). **இந்து ஆலயங்களில்** இராணுவத் தலையீடு, புதைபொருள் ஆராய்ச்சியின் ஆதிக்கம் என்பன **உடன் நிறுத்தப்பட வேண்டும்**,

ஈ). விசாரணையின்றிச் **சிறையில் வாடும்** சகல அரசியல் கைதிகளும் உடனடியாக **விடுதலை செய்ய** நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இன்னுமோர் முக்கிய விடயத்தைகூற விரும்புகின்றோம். பாதுகாப்பு என்ற பெயரில் இந்து ஆலயங்களில் பூஜைகள் நீண்டகாலமாக நடைபெறவில்லை. இதனை கவனத்திலெடுத்து அவ் ஆலயங்களில் தினசரி பூசைகள் நடைபெற புதிய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பாக இந்து சமய விவகாரத்திற்குரிய அமைச்சருடனும் நாம் விரைவில் கலந்துரையாடவுள்ளோம்.

எமது மக்கள் கடந்த சில தசாப்தங்களில் சொல்லொணாத் துயரமும் வேதனையும் அனுபவித்துவருகின்றனர். அந்த மக்கள் தங்களுக்குத் ***“தைபிறந்தால் வழி பிறக்கும்”*** என்ற நம்பிக்கையுடன்தான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தனர். அந்த நம்பிக்கை வீண்போகாது அந்த மக்களின் கண்ணீரைத்துடைக்க அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் முன்வரவேண்டும் என வேண்டுகின்றோம்.

**கந்தையா நீலகண்டன்**
**தலைவர்**

**முத்தையா கதிர்காமநாதன்**
**பொதுச் செயலாளர்**

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)**

தலைமையகம்: இல.91/5, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02, இலங்கை.
Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
தொ.பேசி/Phone : 2434990 www.hinducongress.lk தொ.நகல்/Fax : 2344720
hinducongress@gmail.com